2013 ஏப்ரல் 5]

மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கிற காலத்தில், எதிர்காலத்தில் தேவை ஏற்படுகிற காலத்தில், இதுபோன்ற கல்லூரிகளைத் தொடங்குவதற்கு நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆலோசனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

150—

துணை மின் நிலையம்

***19945—திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, அடையாறு காந்தி நகர் பகுதியில் துணை மின்நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். வேளச்சேரி தொகுதி, அடையாறு காந்தி நகரில் ஒரு 33/11 கே.வி. உள்ளடக்கிய துணை மின் நிலையம்- Indoor sub-station-*இரண்டு 8 எம்.வி. திறன்கொண்ட மின்மாற்றிகளுடன் அமைப்பதற்கு 8 கோடி ரூபாய் மதிப்பில் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

திரு. எம்.கே. அசோக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், தமிழகத்தில் இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்று இரவு, பகல் பாராமல் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை, தமிழக முதல்வர், நாளைய பாரதத்தை வழி நடத்த இருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) வேளச்சேரி தொகுதி, அடையார் காந்தி நகர் பகுதியில் துணை மின்நிலையம் அமைக்க உத்தரவிட்ட அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் கோடானு கோடி நன்றியினை பொற்பாத மலர்களில் சமர்ப்பித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தென்காசி தொகுதி, குற்றாலத்தில் பெருந்திட்டத்தின்கீழ், மாநில அரசு 12-வது நிதிக் குழுமூலம் 110 கே.வி. திறன் கொண்ட துணை மின்நிலையம் அமைக்க அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. துணை மின்நிலையம் அமைப்பதற்கான இடம், குற்றாலத்தில் திருவாடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான 9 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த இடத்தில் துணை மின்நிலையம் அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியம் திருவாடுதுறை ஆதீனத்துடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு, அந்த இடத்தைப் பெறுவதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகிறது என்பதை அறிகிறேன். மேலும், தென்காசி ஒன்றியத்திற்குட்பட்ட பாட்டாகுறிச்சி கிராமத்தில் 33 கே.வி. திறன்கொண்ட துணை மின்நிலையம் அமைக்க அனுமதி வழங்கியுள்ளது. இதுவரை, அங்கு அரசுப் புறம்போக்கு நிலங்கள் ஏதும் தேர்வு செய்ய இயலவில்லை என அறிகிறேன். எனவே, அந்த இரு துணை மின்நிலையங்கள் அமைக்க, இந்து சமய அறநிலையத் துறையிடம் அங்கு போதிய இடங்கள் உள்ளதாகவும், அந்த இடத்தை தற்கால கிரைய மதிப்புப்படி பெறுவதற்கு, தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்ந்து முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் அறிகிறேன். அந்த இரு இடங்களையும் மின் வாரியத்திற்கு வழங்கிட, இந்து சமய அறநிலையத் துறைமூலம் தக்க நடவடிக்கை எடுத்து, துணை மின்நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா? என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2013 ஏப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி பகுதி, குற்றாலத்திலும், பாட்டாகுறிச்சி கிராமத்திலும் முறையே 110/11 கே.வி. மற்றும் 33/11 கே.வி திறன் கொண்ட துணை மின்நிலையங்கள் அமைக்க 12-வது பெருந்திட்டக் காலத்தில், 5 ஆண்டு பெருந்திட்ட காலத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது, தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகளைச் செய்து முடிப்பதற்காக, நிலம் கையகப்படுத்துகின்ற பணிகளை தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்கொண்டிருக்கிறது. அந்த விவரங்களைக்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள்; ‘அங்கே புதிய இடங்கள் கிடைப்பதிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன’ என்றும் சொன்னார்கள். அந்தப் பகுதியில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்ற பகுதிகளில் எல்லாம், அந்தப் பகுதிகளை, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அந்த நிலங்களை ஒப்படைப்பதற்கு வேண்டிய பணிகளைப் பொதுவாகவே, தமிழ்நாடு மின்சார வாரியம் இன்றைக்கு பெறுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்த வகையில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் விதிமுறைகளுக்குட்பட்டு, அவர்கள் அந்த நிலங்களை ஒப்படைப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்காசி சட்டமன்றத் தொகுதி மட்டுமல்ல, எங்கெங்கெல்லாம், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்குச் சொந்தமான இடங்கள் இருக்கிறதோ, அந்த இடங்களில் எல்லாம், தேவை ஏற்பட்டால், மற்ற அரசுப் புறம்போக்கு நிலங்களை பார்க்கின்றோம். புதிய துணை மின்நிலையங்களை அமைக்கின்ற இடங்களைத் தேர்வு செய்கின்றபோது அரசுக்குச் சொந்தமான இடங்களைத் தேர்வு செய்கின்றோம். அந்த இடங்கள் கிடைக்கவில்லையெனில், தனியாரிடம் நிலத்தைக் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு முயற்சிக்கிறோம். அதிலும், இடர்ப்பாடுகள் ஏற்பட்டால், இறுதியாக இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்குச் செல்கிறோம். அவர்களுடைய விதிமுறைகளுக்குட்பட்டு, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

நிலங்களை ஒப்படைப்பதற்கு என்னென்ன விதிமுறைகள் இருக்கின்றதோ, அத்தனையும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஒப்புக்கொண்டு, பூர்த்தி செய்து அந்த நிலத்தைக் கையகப்படுத்துகின்ற பணி நடைபெற்று வருகிறது. அந்தவகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியிலும் விரைவாக அந்த நிலங்களைக் கையகப்படுத்தி, புதிய துணை மின்நிலையங்கள் அமைக்கின்ற பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைந்து மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி, குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டிருக்கிற வெள்ளக்கரை ஊராட்சியில் துணை மின்நிலையம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, அனுமதி பெற்று, புதிய துணை மின்நிலையம் அமைப்பதற்கான பணியைத் துவக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே புதிய துணை மின்நிலையம் அமைக்கப்பட வேண்டிய இடங்களைத் தேர்வு செய்து, நிலங்கள் கண்டறியப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட இடங்களில் புதிய துணை மின்நிலையங்கள் அமைப்பதற்கான பணிகளை தமிழ்நாடு மின்சார வாரியம் விரைவாக எடுத்து வருகிறது. அந்த வகையிலே சில இடங்களிலே தவிர்க்கமுடியாத காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம், அந்த நிலம் கையகப்படுத்துவதிலே ஏற்படுகின்ற பிரச்சினைதான். அதுபோன்ற பிரச்சினைகளிலும் அரசு உடனுக்குடன் கவனம் செலுத்துகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள குறிஞ்சிப்பாடி தொகுதியிலே இருக்கின்ற நிலப் பிரச்சினையிலும் தமிழ்நாடு மின்சார வாரியம் சிறப்புக்

கவனம் செலுத்தி, அந்த இடத்திலே புதியதாக துணை மின்நிலையம் அமைப்பதற்கு வேண்டிய பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைவுபடுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

151—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***25302—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, கத்தேரி ஊராட்சி, வட்டமலை, காந்தி நகர், கத்தேரி நாடார் தெரு, அருந்ததியர் தெரு ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, கத்தேரி ஊராட்சி, வட்டமலை, காந்தி நகர் குடியிருப்புக்கு 2010 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் சங்ககிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து காவேரி குடிநீரும் மற்றும் தனி மின் விசை திட்டத்திலிருந்து ஆழ்துளைக் கிணற்று நீரும் சுழற்சி முறையில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கத்தேரி ஊராட்சி, கத்தேரி குடியிருப்பில் உள்ள நாடார் தெரு மற்றும் அருந்ததியர்